




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வரைவு வாக்குச்சாவடி பட்டியல் குறித்து, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (12.09.2016) நடைபெற்றது. ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 630/2016 நாள்: 12.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**வரைவு வாக்குச்சாவடி பட்டியல் குறித்து,**
**அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக் கூட்டம்**
**இன்று (12.09.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வரைவு வாக்குச்சாவடி பட்டியல் குறித்து, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (12.09.2016) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தல் 2016-ஐ முன்னிட்டு, வரைவு வாக்குச்சாவடி பட்டியல் ஏற்கெனவே அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் திருத்தம் இருந்தால், கட்சி பிரமுகர்கள் எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

கட்சி பிரமுகர்கள் தெரிவித்த திருத்தங்களை ஆய்வு செய்து, சரியாக இருப்பின், அதனை திருத்தி, இறுதி வாக்குச்சாவடி பட்டியல் 14.09.2016 அன்று வெளியிடப்படும்.

இதற்கு முன்பாக (2011) நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் இருந்த வாக்குச்சாவடிகளை விட, தற்போது நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் 114 வாக்குச்சாவடிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஊரக பகுதிகளுக்கு 801 வாக்குச்சாவடிகளும், பேரூராட்சிக்கு 970 வாக்குச்சாவடிகளும், நகராட்சிகளுக்கு 275 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 2,046 வாக்குச்சாவடிகள் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளது. மேலும் வாக்காளர் பட்டியல் 17.09.2016-க்குள் வெளியிட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி, உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு. ஆறுமுகம், உதவி திட்ட அலுவலர்கள் திருமதி. சசிரேகா, திருமதி. தமிழ்செல்வி, நாகர்கோவில் நகராட்சி (பொ) திரு. சுரேஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. குமார், திரு. வர்க்கீஸ், திரு. சுனில்குமார், திருமதி. கலைச்செல்வி, திரு. முத்துக்குமார், திருமதி. ரோகிணி குமாரி, திருமதி. ஜெயஸ்ரீ, திரு. நாகராஜன், திரு. விஜயன், அஇஅதிமுக சார்பாக திரு. நாஞ்சில் எம்.சந்திரன், தி.மு.க. சார்பாக திரு. பி லீனஸ்ராஜ், பிஜேபி சார்பாக திரு. மணி சாமிகள், தேமுதிக சார்பாக திரு. ஜெயபிரபாகர் மற்றும் திரு. செல்வராஜன், சிபிஐ(எம்) திரு.எஸ்.மணி, தேசிய வாத காங்கிரஸ் திரு. பி. செல்வம், கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக திரு. வி.கோபி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக (மார்க்ஸ்ட்) திரு. என்.எஸ்.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.